திரு. ம. கமலநாதன் : இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறது? அது எப்போது துவக்கப் படும்?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் புதிதாகக் கால்நடைப் பண்ணை அமைக்கப்படக் கூடிய நிலையில், ஏற்கனவே நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஹோசூர் கால் நடைப் பண்ணையையே மேலும் விஸ்தரிப்பதற்கு ஏன் அனுமதிக்கக் கூடாது?

கனம் திரு. பூ. கக்கன் : ஹோசூர் கால்நடைப் பண்ணையானது இந்தியா தேசத்திலேயே மிகப் பெரிய அளவில் நல்ல முறையில் நடைபெற்று வருகிற பண்ணையாகும். அங்கு ஒரு பண்ணை இருந்தாலும், நாட்டில் இன்னும் பல பண்ணைகளை அமைக்கவேண்டும் என்ற வகையில், சென்னை நகரத்தையடுத்த ஸ்ரீபெரும்புதூருக்குப் பக்கத்தில் ஓர் இடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஹோசூர் பண்ணையை மேலும் விரிவாக்கவேண்டுமென்றால், அதிகமாகச் செலவாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* 317 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the work done by the sheep farm in Sandynallah in Nilgiris district till date towards the improvement of indigenous sheep and also production of high variety of wool?

கனம் திரு. பூ. கக்கன் : சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி அபிவிருத்தி செய்த ஆட்டினம் தனியார்களுக்கும் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தின்கீழ் தனியார்கள் வைத்திருக்கும் ஆட்டின அபிவிருத்திக்கும் விஸ்தரிக்கப்படுகிறதா என்றால், அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். தனியார்கள் வைத்திருக்கும் ஆட்டினங்களை அபிவிருத்தி செய்வதற்கும், கடா கொடுப்பதற்கு ஏற்பாடு இருக்கிறது.

* 318 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :**
திரு. வை. சங்கரன் : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகமண்டலத்திலுள்ள ஆடு வளர்ப்புப் பண்ணையில் சமீபத்தில் அதிக அளவில் ஆடுகள் இறந்து போயின என்பது உண்மையா?

(இ) ஆமெனில் எத்தனை ஆடுகள் இறந்தன?

(உ) அதன்மூலம் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

(எ) இது குறித்து எடுத்துக் கொள்ளப்பட்ட தடுப்பு முறைகளின் விவரமென்ன?

---

* 97–101-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

2nd November 1966]

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : சார், உதகமண்டலத்தில் உள்ள ஆட்டுப் பண்ணையில் 423 ஆடுகள் இறந்து விட்டன என்று அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். அந்தப் பண்ணையில் உள்ள மொத்த ஆடுகள் எத்தனை என்று அறியலாமா ? 11-30 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தப் பண்ணையில் 1966-67-இல் 1,760 ஆடுகள் இருந்தன.

திரு. து. ப. அழகமுத்து : அந்தப் பண்ணையில் எந்த ரக ஆடுகள் வளர்க்கப்படுகின்றன ? இவ்வளவு அதிகமான ஆடுகள் இறந்து போனதற்கான காரணங்கள் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : சீமையில் இருந்து கடா ஆடுகள் கொண்டு வந்திருக்கிறார்கள். நீலகிரியிலுள்ள ஆட்டு ரகத்தை இந்த ஆடுகளைக் கொண்டு உயர்த்தினால் ரோமம் உயர்ந்ததாக, அதிகம் கிடைக்கக்கூடும் என்று செய்திருக்கிறோம். இன அபிவிருத்தி செய்து கம்பளி உற்பத்திக்கு வழிவகுக்க வேண்டும் என்று செய் தோம். அங்கிருந்து வந்த ஆடுகள், இங்குள்ள ஆடுகளோடு சேர்ந்து போட்ட குட்டிகள் தான் அதிகம் இறந்துவிட்டன. இறந்துபோன ஆடுகளை அறுத்து வைத்தியப் பரிசோதனை செய் ததில் அவற்றுக்குக் கண்டு இருந்த நோய் தெரியவந்தது. அத் தகைய நோய் மற்ற ஆடுகளுக்கு வராதிருக்கப் போதுமான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இதுபற்றி ஒரு மகாநாடு கூட நடத்திப் பரிசீலனை செய்ய இருக்கிறோம். மேலும் ஆடுகள் இறக்கக் கூடாது என்பதற்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : சீமையில் இருந்து ஆடுகள் தருவிக்கப் பட்டன என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்தச் சீமையிலிருந்து ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டன.

திரு. எம். எஸ். மணி : இவ்வளவு ஆடுகள் இறந்ததற்குக் காரணம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடு கள், நீலகிரியிலுள்ள இலைகளைத் தின்கிறபோது ஜீரணித்துக் கொள்ள சக்தி இல்லாது இருப்பது தான் என்று ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே, இதனால் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் மேற்கொண்டு இந்த ரக ஆடுகளை வளர்ப்பதில் பிரயோசனம் இல்லை என்று குறிப்பிட்டிருக் கிறார்களே, இப்படிப்பட்ட காரியத்தில் இனி இறங்காமல் இருக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : நீலகிரிப் பகுதியில் உள்ள இலைகளை இந்த ஆடுகளால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை என்ற கருத்தை எந்த ஆராய்ச்சியாளர் சொன்னார் என்று தெரியவில்லை.

---

[a] Printed as Appendix III on pages 101-102.

[2nd November 1966

கனம் அங்கத்தினருக்கு என்கிருந்து அந்த விவரம் கிடைத்ததோ தெரியாது. அந்த மாதிரி அரசாங்கத்திடம் எவ்விதத் தகவலும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : 423 ஆடுகள் இறந்துவிட்டன, 12 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவு ஆடுகளும் ஒரு மாத காலத்தில் இறந்தனவா ? ஓராண்டு காலத்திற்குள் இறந்தனவா ? ஒரு மாத காலத்திற்குள் இறந்தன என்றால் வைத்தியப் பரிசோதனை செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரே மாதத்தில் சாகவில்லை. தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களில் இறந்தன. அவை எத்தகைய நோயினால் இறந்தன என்று ஆராய்ந்து அந்த நோய் வராமல் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, சீமையில் இருந்து வந்த ஆடுகளுக்கும், இங்குள்ள ஆடுகளுக்கும் பிறந்த குட்டிகள் இறந்தன என்று குறிப்பிட்டார்கள். சீமையில் இருந்து வந்துள்ள ஆடுகளே இறந்திருக்கின்றனவா ? அப்படி என்றால் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : இத்தகைய முழு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

Films on Farm problems

* 319 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Department has produced a series of films on Farm problems in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வெளியான திரைப்படங்களின் விவரங்கள் பின் வருமாறு :—

(1) ஜப்பானிய நெல் பயிராகும் முறை (சாதாரணப் படம்).

(2) வேர்க்கடலைப் பயிர்கள் மீது விமானத்திலிருந்து மருந்து தெளித்தல் (சாதாரணப் படம்).

(3) குப்பை உரம் தயாரித்துப் பயன்படுத்துதல் (ஈஸ்ட்மன் வர்ணப்படம்).

(4) சோளப் பயிரைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(5) பருத்தியைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).